(உ) சொந்த மாவட்டங்களில் கிராம நிர்வாக அலுவலர்கள் பணியாற்ற ஏற்பாடு.

*திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, கிராம நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்பட்ட நேரத்தில் அவர்கள் சொந்த பகுதிகளிலே பணியாற்றக் கூடாது என்ற நிலைமை இருந்தது. ஆனால் சென்ற ஆண்டு அவர்களுடைய சொந்தப் பகுதிகளில் சொந்த ஃபிர்க்கா, சொந்த வட்டாரத்தில் பணியாற்றலாம் என்று அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டதற்குப் பின்னர் பெரும்பாலான மாவட்டங்களில் இன்றைய தினம் அவர்கள் சொந்த ஃபிர்க்காக்களிலே, வட்டாரங்களிலே பணிக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். ஆனால் கோவை மாவட்டத்திலே மட்டும் இன்று வரையில் அந்த ஆணை அமுல்படுத்தப்படவில்லை. பலகாலமாக கிராம நிர்வாக அதிகாரிகள் தங்களுடைய கோரிக்கையாக அதை வைத்திருக்கிறார்கள். குறிப்பாக, சென்ற இரண்டு தினங்களுக்கு முன்னால் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு முன்னால் அவர்கள் மறியல் செய்திருக்கிறார்கள். அதிலே 125 பேர்கள் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டதாக நான் அறிகிறேன். அவர்களுடைய கோரிக்கையை இந்த அரசாங்கம் அமல்படுத்த வேண்டுமென்று மற்ற மாவட்டங்களில் இருப்பதைப் போல கோவை மாவட்டத்தில் அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இரண்டாவதாக பொதுப்பணித் துறை....... மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பொது சொற்பொழிவு இல்லையே!

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானம் மிகு உறுப்பினர் அருமைத் தம்பி திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மிகுந்த உரிமையுடன் சொல்கிறார்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: அவர் கேட்ட கேள்வியைப் பற்றிய தகவல் எனக்கு இல்லை. அவர் உங்களுக்கு ஏதாவது கவன ஈர்ப்புத் தீர்மானம் என்ற முறையிலோ ஒத்தி வைப்புத் தீர்மானம் என்ற முறையிலோ எழுதியனுப்பியிருக்கிறாரா என்பதும் எனக்குத் தெரியாது. தெரியாத நிலையில் எப்படி இதை கேட்கிறார் என்றும் எனக்கு புரியவில்லை. மற்றைய மாவட்டங்களில் எல்லாம் ஒழுங்காக நடைபெற்றன என்று சொல்லி விட்டு கோவை மாவட்டத்தில் மட்டும் என்று நீங்கள் குறிப்பிடுகிறீர்கள். உங்களுக்குத் தெரிந்த

1989 நவம்பர் 2] [திரு. நாஞ்சில் கி. மனோகரன்]

உண்மை என்று நான் எடுத்துக் கொள்ளலாம், ஆனால் விவரம் எனக்குத் தெரியாது. விவரம் கிடைத்ததற்குப் பிறகு உடனடித் தகவல் தரப்படும். சட்டப் பேரவை இல்லாவிட்டாலும் எழுத்து மூலமாவது தரப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு மேல் கேள்வி இல்லை.

(ஊ) ஈட்டுறுதியுடன் இணைந்த ஓய்வூதியத் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது குறித்து.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் தந்த இந்த வாய்ப்பின் மூலம் ஒரு முக்கியமானப் பிரச்சினையை நமது அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். கடந்த அரசு ஈட்டுறுதியுடன் இணைந்த ஓய்வு உதவி சிறப்புத் திட்டம் என்கிற ஒரு திட்டத்தை அறிவித்திருந்தது. அந்தத் திட்டத்தின் அடிப்படையில் சிறு விவசாயிகள், விவசாயக் கூலித் தொழிலாளர்கள், நெசவாளர்கள்; சிறு வணிகர்கள் மாதம் ரூபாய் 10 கட்டி, ஆயுள் காப்பீட்டுக் கழகமும் தமிழக அரசும் சேர்ந்து நடத்திய இந்த ஈட்டுறுதியுடன் இணைந்த ஓய் திட்டத்திலே இறந்தாலும், ஓய்வு பெற்றாலும் 5,000 ரூபாம் பெற்று வந்தார்கள். ஆனால் இன்றைய இந்த அரசு 1—8—1989 முதல் இந்தத் திட்டத்தை நிறுத்தி விட்டதாக அறிவித்து விட்டது.

என்னுடைய சட்ட மன்றத் தொகுதியில் மட்டும் ஏறத்தாழ 4,000 பேருக்கு மேல் இந்தத் திட்டத்திலே சேர்ந்து பணம் கட்டியிருக்கிறார்கள். கடந்த முறை நமது விவசாயத் துறை அமைச்சர் மாண்புமிகு கோ. சி. மணி அவர்கள் கூட எங்கள் பகுதிக்கு வந்திருந்த போது அந்தப் பகுதி விவசாயிகள், அவர்களைக் கூட்டமாகச் சென்று சந்தித்து இந்தத் திட்டத்தை மீண்டும் நடத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள்.

உதாரணமாக ஒரு சீட்டுக் கம்பெனியிலே சீட்டு நடத்தி அதைப் பாதியிலே விட்டு விட்டால் அதை மோசடி சீட்டுக் கம்பெனி என்று சொல்கிறோம்.**

Whether the Government can go back from the promise made already to the public.

10 ரூபாய் சந்தாத் திட்டத்தில் சேர்த்து, அதற்கான கார்டுகளும் அச்சடித்துக் கொடுக்கப்பட்டு, உரிமையும் கொடுக்கப்பட்டிருந்த போது திடீரென்று ஒரு அரசு ஆணை குறிப்பின் மூலம்அந்தத் திட்டத்தை விட்டு விட முடியுமா? அதை நான் கடந்த முறை முதலமைச்சர் அவர்கள் நெல்லைக்கு வந்திருந்த போது (மணியடிக்கப் பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.